International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 2 April - June 2026

Published on 14, April - June 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# பெண்ணிய நோக்கில் குட்டி ரேவதி கவிதைகள்

**மு. கயல்விழி**
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்

**முனைவர் சொ. சுரேஷ்**
உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி-03

மாந்தரின் வாழ்வைக் காட்சிப்படுத்துவது இலக்கியமாகும். அவ்விலக்கியங்கள் காலத்திற்கேற்ப வளர்ச்சி அடைகின்றன. இன்றையக் காலத்தில் தோன்றிய இலக்கியங்களுள் புதினம், சிறுகதை, கவிதை போன்றவை வளர்ச்சி அடைந்து வருகின்றன. இவற்றில் கவிதைகளைப் படைத்துக் காட்டுவதில் இலக்கியப் படைப்பாளர்கள் சிறந்து விளங்குகிறார்கள். கவிதை என்பது நுட்பமான உணர்வுகளின் வெளிப்பாடகும். ஆசிரியரின் உள்ளக்கருத்தின் வெளிப்பாட்டை வாசகனும் கண்டு உணர்வான். பெண் என்ற ஒற்றைச் சொல்லைக் கொண்டு பெண்ணடிமை செய்யும் ஆணாதிக்க சமூகக் கட்டமைப்பை கவிஞர்கள் எழுத்தின் மூலம் தோலைத் துளைக்கும் தீயம்புகளால் வெளிப்படுத்துகின்றனர். அத்தகுநிலையில் குட்டிரேவதி கவிதைகளில் காணப்படும் பெண்ணியம் குறித்து ஆராய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

**பெண்ணியம்-விளக்கம்**

feminism என்ற ஆங்கிலச் சொல்லானது தமிழில் பெண்ணியம், பெண்நிலைவாதம், பெண்ணுரிமை எனப் பலவாறு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இவற்றில் feminism என்பதற்குப் பெண்ணியம் என்ற சொல்லே இன்று பெரு வழக்காய் நிலைபெற்றுவிட்டது. இலத்தீன் மொழியில் "பெண்" என்று பொருள் தரும் 'பெமினா' என்ற சொல்லிருந்து பெண்ணியம் என்ற சொல் உருவானது."பெண்ணியம் என்பது பெண் சமத்துவம் வேண்டிப் போராடும் பெண் இயக்கங்களையும், அவற்றின் செயல்பாடுகளையும் குறிக்கிறது"[1] என்கிறார் வாசுகி ஜெயரத்னம்

"பெண்ணியம் என்பது பெண்களுக்கான உரிமைகளைப் பெற்றுத்தருவது மட்டுமல்ல, சமூகத்தையே மாற்றியமைக்க முயல்வதாகும். தெற்காசிய நாடுகளில் பெண்கள் சமூகம், அலுவலகம், குடும்பம் போன்றவற்றில் ஒடுக்கப்படுவது பற்றிய விழிப்புணர்ச்சியையும் அத்தகைய இழிவுபடுத்தும் போக்கினை மாற்றியமைக்க ஆண்களும் பெண்களும்ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு செயல்படும் தன்மையைப் பெண்ணியம் கொண்டுள்ளது"[2] என்று ரெங்கம்மாள்.இரா குறிப்பிடுவார். "பெண்ணியம் என்பது பெண்ணடிமையைச் சுட்டிக்காட்டிய பெண்விடுதலையை நோக்கமாகக் கொண்டது பொறுப்புகளை ஏற்று மீட்சி பெற்றுத் தன்னுரிமையும் வாழ்வுரிமையும் பெறுவதை இலக்காகக் கொண்டது"[3] என்கிறார் சி.சீதளா பக்கிரசாமி. இவ்வாறு பெண்ணியம் பற்றி பல்வேறு அறிஞர்கள் வரையறை தந்துள்ளனர். ஆண், பெண் சமநிகர் என்ற அடிப்படையில் தோன்றிய சிந்தனையின் மூலம் எழுந்த குரல்வழி வந்த கருத்தியல் போராட்டமே பெண்ணியம் ஆகும்

**பெண்ணின் துயரம்**

சமூகக்கட்டமைப்பில் பாலினப் பாகுபாடு, அடக்கு முறை, சமஉரிமையின்மை, வரதட் சணை

போன்றவை காலம்தோறும் சமூகத்தில் நிகழ்கின்றன. பெண்களின் தனிமை, குழந்தை யின்மை, திருமண வாழ்க்கையில் விருப்பம் இல்லாமல் நடக்கும் கூடல், நிறைவு இல்லாத தாம்பத்திய வாழ்க்கை போன்றவை பெண் களுக்கு பெரும்துயரத்தைத் தருகின்றன. இத்தகைய துன்பியல் நிகழ்வுகளையும் உணர்வுகளையும் வெளிப்படுத்த பெண் படைப்பாளர்கள் முன்எடுக்கின்ற முயற்சியின் மூலம் பெண்களின் மனநிலையை உணர முடிகிறது. பெண்கள் அடையும் உள்ளத் துயரத்தை,

**குழந்தைமைக் கேவலோ**

**கன்னிமைக் காதலோ**

**விதவை மறைக்கும் மோகமோ**

**முகம் தீய்த்த ஓவியமாய்**

**தவிக்கிறது அதன் உட்பொருள்”[4]**

(பூனையைப் போல அலையும் வெளிச்சம்)

என்ற கவிதையின் வாயிலாக வயது முதிர்ந்து திருமணம் ஆகாத பெண்கள் படும் துயரத்தை யும் திருமணம் முடிந்து கணவனை இழந்து வாழும் பெண்ணை விதவை என்றும் திருமணம் முடித்த பிறகு மக்கட்பேறு இல்லாத பெண்களை மலடி என்றும் இச்சமூகம் கடுஞ் சொற்களின் மூலம் இழிவுப்படுத்துவதால் அவர் களின் மனம் துன்பத்தில் ஆள்வதைப் படைப்பாளர் குட்டிரேவதி வெளிப்படுத்தியுள் ளார். இதனைப் போன்று பொதுவாக ஆண்களின் உளவியல், வெளிப்படையாகத் தோன்றும் செயல்களின் மூலமே பெண்ணின் உணர்வு களைப் புரிந்துகொள்ளும் நிலையில் அமையும். இதற்கு மாறாக சில நேரங்களில் அருகில் அமர்ந்து அழுதால் கூட அதனை ஆண்கள் அலட்சியப்படுத்தி நகர்ந்து சென்று பெண்க ளுக்குத் தனிமையின் துயரத்தைத் தருகின்றனர் என்பதைப் படைப்பாளர்

**விரகத்தில் முனகும் பெண்ணின் இசைப்பாடல்**

**எவருக்கும் தெியாமல் உதிரமாய்க் கொட்டுகிறது**

**அவன் மெல்லியச் சுவாசக் கூட்டுடன் அயர்ந்து உறங்கிக் கொண்டிருக்கிறான் அருகில்”[5]** (தனிமையில்ஆயிரம் இறக்கைகள்)

என்ற கவிதையின் மூலம் உணர்த்தியுள்ளார். இதன் வழி பெண்ணியம் பற்றி அதிகமாகப் பேசும் பெண்ணிய கவிஞர்கள் மிகுந்த கவனம் செலுத்துவது குடும்ப பெண்களின் மனநிலை தான் என்பதைனை அறியமுடிகிறது. மேலும் பெண்கள் குடும்பத்திற்கு ஏற்ப தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும். இதனைப் படைப்பாசிரியர்

**ஒவ்வொரு நூற்றாண்டுக்கும் அவளின் பரிமாணம்**

**மாற வேண்டியிருந்தது**

**உணவு உண்டு கைகழுவும் முன்**

**குழந்தையின் மலம் கழுவ வேண்டியும்**

**மழைக்குக் குடையை விரித்தவாறே**

**அதன் ஓட்டைகளைத் தைக்க வேண்டியும்**

**விளையாட யாருமற்ற குழந்தையின் சோகத்துடன்**

**அவளின் மதியப்பொழுதுகளும்**

**வெறுமை தளும்பும் அறைகளும்”[6]**

(தனிமையில்ஆயிரம் இறக்கைகள்)

என்ற கவிதையின் வழியாக குறிப்பிட்டுள்ளார். இவ்வரிகளின் வழி குடும்ப பெண்களின் மனநிலையை உணர்த்துவதோடு மட்டுமல்லா மல் அனைவரையும் கவனிக்கும் குடும்ப தலைவியின் தனிமை உணர்வை வெளிப் படுத்துவதாக படைப்பாசிரியர் கவிதையை வடிவமைத்துள்ளார்.

**வறுமையும் விற்பனைப் பொருளும்**

ஒவ்வொரு தனிமனிதருக்கும் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யப் போதுமான பொருளாதாரமின்மையே வறுமையாகும். இத்தகைய பொருளாதாரமின்மை ஒவ்வொரு மனிதருக்கும் உடல்நலமின்மை, கல்வியின்மை, இயற்கை பேரிடர் மற்றும் தவறான சமூக கட்டமைப்பினால் ஏற்படுகின்றது. அத்தகுநிலை யில் வறுமையில் வாழும் பெண்கள் அத்தியா வசிய பொருள்கள் கூட வாங்க முடியாத இடத்தில் அவ்வறுமையை போக்க தனது உடல்உறுப்புகளை விற்கும் நிலைக்கு ஆளாவதை,

**வறுமைக்கோட்டைக்**

**கரைக்கவே முடியாமல் தான்**

**முலைகளை விற்பதென முடிவு செய்தேன்**

**இன்னபிற உறுப்புகளையெல்லாம்**

**ஏலத்தில் இழந்தபின்...[7]**

என்ற கவிதையின் மூலம் படைப்பாளர் வெளிப்படுத்தியுள்ளார். சங்ககாலத்தில் இருந்து தற்காலம் வரை வறுமை என்பது இருந்து கொண்டே தான் இருக்கிறது. வறுமையினால் குப்பைகீரையை சமைத்து உண்ணும் நிலையைப் பண்டைய இலக்கியங்களில் அறியமுடிகிறது. தற்காலத்தில் வறுமையால் பாதிக்கபட்ட பெண் தனது உடல் உறுப்புகளை

விற்க்கும் நிலைக்கு சமூகத்தால் உந்தப் படுவதைப் படைப்பாசிரியர் குட்டிரேவதி எடுத்துக் காட்டியுள்ளார்.

**பெண்கள் மிதான வன்முறை**

ஆண்களால் பெண்களுக்கு இழைக்கப் படுகின்ற கொடுமைகளில் பாலியல் வன்முறை யும் ஒன்று. இதனால் சிறு குழந்தை முதல் முதியவர் வரை உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் தொடர்ந்து பாதிக்கப்படுகின்றனர். இன்றைய நிலையில் பெண்களின் மீதான பாலியல் வன்முறை தொடர்ந்து கொண்டிருப் பதைப் படைப்பாளர் குட்டிரேவதி,

**மழையில் மழையில் நனைந்தவாறு**

**கடலையே இமைக்காமல் நோக்கியிருந்தாளாம்**

**உடம்பெல்லாம் மயிர் ஆம்பிளை மாதிரி**

**இங்கு தான் அவள் கண்மூடினாள் எனப்**

**பூக்கள் விழித்த புதரைக்காட்டினர்**

**அழுதுவிட்டேன் நான்**[8] (நினைவுமேடு)

என்ற கவிதையின் மூலம் ஒரு பெண்ணின் தோற்றம், நடை, குணம், குரல் வளம், போன்ற வற்றை எடுத்துரைத்து இறுதியில் அவள் பாலியல் வன்முறைக்கு ஆளாகி இறந்ததை எடுத்துரைத்துள்ளார். பெண் சுதந்திரம் என்பது காலங்காலமாக பேச்சுப் பொருளாக தான் இருக்கிறது. பெண்குழந்தைக்கானச் சுதந்திரம் கிடைத்துவிட்டதா? என்று கேட்டால் அது கேள்விக்குறியாக தான் உள்ளது. சமுதாயம் பல நிலைகளில் வளர்ச்சி அடைந்தாலும் பெண் சிசு மீதான அத்து மீறல் இன்றும் தொடர்கிறது என்பதை உணர்வுகளின் குவியலாக குட்டி ரேவதி படம்பிடித்துக் காட்டியுள்ளார். இதனைத் தொடர்ந்து திருமணம் ஆன பெண்ணிற்கு நடக்கும் பாலியல் வன்முறை திருமணம் முடிந்த நாளில் இருந்ததே தொடர்கிறது. திருமணம் முடிந்ததும் மனைவி தனக்கு அடிமை என்கின்ற மனநிலையில் மனைவியின் விருப்பம் இல்லாமல் அவளைக் கூடலில் ஈடுபடுத்தும் துன்பத்தை, முலைகள் என்னும் கவிதையின் வாயிலாக படைப்பாளர் சுட்டுவர்

**இரவுக்குள் நுழையும் பெண்**

**தன் படுக்கையைச் சரி செய்துகொள்கிறாள்**

**துன்பத்தின் வனமும் அங்ஙனமே**[9] (முலைகள்)

என்று இல்லறவாழ்க்கையில் ஒரு பெண்ணிற்கு நிகழும் துன்பமான மனஉணர்வை குட்டிரேவதி எடுத்துரைத்துரைத்துள்ளார். அதிலும் கணவனே பாலியல் வன்முறையில் ஈடுபடும் பொழுது பெண் உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் வாழ்க்கைச் சிதைவுக்கு ஆளாகிறாள். இதனை

**எண்ணிக்கையற்ற முறைகள்**

**வன்கலவிக்கு உள்ளான மென்னுடலை**

**ஊசிகள் பொதியப்பட்டது என்றாள் நீலவேணி**[10] (ஊசிகள்)

என்று விருப்பமற்ற முறையில் நடக்கும் பெண்ணின் இல்லற வாழ்வைப் படைப்பாசிரியர் பதிவுச்செய்துவுள்ளார்.

**பெண்ணடிமை**

பெண் என்பவள் எதிர்காலத்தை எண்ணிப் பல கனவுளோடு வாழ விரும்பினாலும் அதற்கு தடையாகச் சமூகக்கட்டமைப்பு அமைந்துள்ளது. பெண் சமையல் அறைக்கு மட்டும் சொந்தம் ஆனவள் இந்நிலை பழங்காலத்தில் இருந்தே தொடர்ந்து வருகிறது. அடுப்பூதும் பெண்களுக் குப் படிப்பு எதற்கு? என்ற நிலையை மாற்றியமைக்க பாரதியார், பாரதிதாசன் போன்றறோர் குரல் எழுப்பினர்.இருப்பினும் தற்கால சமூகத்தில் பெண்களுக்கு சமஉரிமை இன்றும் கிடைக்காமல் இருந்து வருகிறது. மேலும் இதனை,

**யார் மூட்டினாலும் அடுப்பு எரியத்தான்
செய்யும் !**[12]

என்ற கூற்றின் மூலம் அறியமுடிகிறது. பெண்கள் இன்று பல துறைகளில் சாதனை செய்தாலும் அவர்களுக்கான உலகம் சமையலறை என்கின்ற கருத்துநிலையை எதிர்த்து கேள்வி கேட்பதாக குட்டிரேவதி 'அடுப்பு' என்கின்ற கவிதையின் வாயிலாக வெளிப்படுத்துகிறார். சமூகத்தில் பெண்ணிற்கு விதிக்கப்படும் பண்பாட்டு ஒழுங்கமைவுக்குட் பட்ட நிபந்தனைகளில் பெண்களை அடிமைப் படுத்துவற்காக வரையறுக்கப்பட்ட சூழல்களுக் குப் படைப்பாளர்கள் காலம்தோறும் குரல் கொடுத்து வருகின்றனர். அவ்வகையில் படைப்பாளர் குட்டிரேவதி

**முதலில் எல்லாவற்றையும் நினைவூட்டிக்
கொள்கிறேன்**

**மறுக்கப்பட்ட மகுடங்களை**

**பின்**

**எல்லாவற்றையும் மறுக்கிறேன்**

**வரலாற்றின் பிழைகளை**

**உடலை வரையும் கீறல்களை**

**படிமச்சிதைவுகளை**

**நரம்புகளில் ஏறிய குற்றங்களை**[13]

என்ற கவிதையின் மூலம் சமூகக்கட்டமைப்பில் ஏற்பட்ட பெண்களுக்கு எதிரான வரலாற்று பிழைகளை மறுத்து அதனை வேரருக்கும்

வகையில் எடுத்துரைத்து இருப்பதை அறிய முடிகிறது.

**பெண்கல்வி**

உலகில் மனிதராகப் பிறந்த அனைவருக்கும் கல்வியென்பது அவசியமான ஒன்றாகும். காலம் தோறும் பெண்களுக்கான கல்வி மறுக்கப் பட்டிருந்தாலும் இன்றையநிலையில் பெண்கள் கல்விகற்று சிறந்தவர்களாகத் திகழ்கின்றனர் என்பதில் ஐயமில்லை. பெண்கள் கல்வி கற்றதனால் தாழ்வுணர்ச்சியிலிருந்து தங்களை மீட்டெடுத்து தன்னம்பிக்கையுடன் பல தளங்களில் தடம்பதிக்க உதவுகிறது.மேலும் பெண்கள் தங்களை முதன்மைப்படுத்திக் கொள்வதற்கு உற்ற துணையாக இருக்கும் கல்வியினைக் கற்று முன்னேற்றப் பாதையை உருவாக்கிக் கொண்டாலும் அவர்களை அறிவில்லாதவர்கள் என்று தான் இச்சமூகம் கருதுகின்றது என்பதை,

**படிக்க நிம்ரபவும் ஆசை கொண்ட**
**அக்காவின் கனவில்**
**இன்றும்**
**எழுத்துகள் எல்லாம் உயிர்கொண்டு**
**நண்டுகளைப் போல்**
**மாமிசத்துண்டங்களை உலர்மத்தும் கிழவி**
**மாமிசங்கள் முன் இல்லாமல்**
**ஈக்களை விரட்டிக்கொண்டேயிருக்கிறாள்**
**இன்னும்**
**படித்தாலும் எனக்கு அறிவே இல்லை**
**என்றும்**
**தனியாகபட பேசிக்கொண்டேயிருப்பதால்**
**கிறுக்கி என்றும் சொல்கின்றனர்**[14]

பெண்கல்வி கட்டாயமாக்கப் பட்டிருக்கின்ற இன்றைய சூழலில் இன்னமும் எதிர்ப்புத் தெரிவிக்கும் சில மனித இனங்களிடமிருந்து விடைபெற வழியின்றி தவிக்கும் பெண்ணினத் தின் உரிமையின் வெளிப்பாட்டைக் குட்டிரேவதி உணர்த்தியுள்ளார்.

**முடிவுரை**

நவீனகாலச் சமூகத்தில் பெண்களுக்குக் குடும்பத்தினாலும் சமூகத்தினாலும் ஆண்க ளாலும் எற்படக் கூடியத் துன்பங்களும் துயரங்களும் கொடுகமைளும் எண்ணிலடங்கா வகையில் நிலவிவருகின்றது. மேலும் தவறான சமூகக்கட்டமைப்பினால் ஏற்படுகின்ற பொருளா தாரச் சிக்கலால் வறுமைக்கு உள்ளக்கப்பட்டப் பெண்கள் தங்களின் உடல் உறுப்புகளை விற்று வறுமையை நீக்கிக்கொள்ளும் அவல நிலையும் நிகழ்கின்றன. ஆண்களுக்கு எற்படும் வறுமையின் காரணமவும் வேலையின்மை காரணமாகவும் மது பழக்கத்தின் காரணமாக வும் தோன்றும் தவறான இச்சை எண்ணத்தின் விளைவாக பெண் மீதான வன்முறைத் தாக்குதல் மிக அதிகமாக நடக்கின்றன. மேலும் பெண்கள் கல்விகற்று சிறந்து விளங்கினாலும் அவர்களை இழிவாகவும் அடிமை நிலையிலும் பார்க்க கூடியச் சமூகம் தற்பொழும் தொடர் வதை அறியமுடிகிறது. பெண்கள் திருமண வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்களையும் பாலியல் வன்முறைகளையும் தனது படைப்பில் படைப்பாளர் பதிவுச்செய்துள்ளார். பெண்கள் எதிர்க்கொள்ளும் பிரச்சனைகளை மிக அழுத்த மாக பெண்படைப்பாசிரியர்கள் பதிவுச்செய்யத் தொடங்கியுள்ளார்கள் என்பதை நிரூபிக்கும் வகையில் குட்டிரேவதியின் படைப்புகள் அமைந்துள்ளன.

**சான்றெண் விளக்கம்**

1. வாசுகி ஜெயரத்னம், பெண்ணிய சுவடுகள், ப.2
2. ரெங்கம்மாள். இரா.பெண்ணிய அணுகுமுறைகளும் இலக்கியப்பண்பாடும்,ப.7
3. சி.சீதளாபக்கிரசாமி, மானுடவியலும் பெண் ணியமும், ஆய்வுக்கோவை1998, பக் 127
4. குட்டிரேவதி கவிதைகள் தொகுதி ஒன்று, பக்-18
5. மேலது, பக்-162
6. மேலது, பக்-214
7. மேலது, பக்-218
8. மேலது, பக்-84
9. மேலது, பக்-488
10. மேலது, பக்-186
11. மேலது, பக்-426
12. மேலது, பக்க.104-105

**துணைநூற்பட்டியல்**

1. வாசுகி ஜெயரத்னம், பெண்ணிய சுவடுகள், அறிவுப்பதிப்பகம், சென்னை-14,2009
2. ரெங்கம்மாள்.இரா.பெண்ணிய அணுகுமுறை களும் இலக்கியப்பண்பாடும், அறிவுப் பதிப்பகம், சென்னை-14,2005
3. ஆய்வுக்கோவை, மனோன்மணியம் பல்கலைக்கழகம்-627012, 1998
4. குட்டிரேவதி கவிதைகள் தொகுதி ஒன்று, எழுத்து பிரசுரம், 2019, சென்னை-600040